# රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

Independence Square, Colombo 07, Sri Lanka.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/GR.I POSTING | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.02.21 |

சகல அமைச்சக்களினதும் செயலாளர்கள்

சகல திணைக்களங்களினதும் தலைவர்கள்

<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2022 இன் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்</u>

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் இலக்கம்: PSC/PRO/7/1898/2022 மற்றும் 2023.02.09ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பின்வரும் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. 2023.01.05 ஆந் திகதிய இலக்கம் 20 இன் தேர்தல் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 09.(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் படி நாடளாவிய சேவைகளின் நிறைவேற்றுத் தரச் சேவை வகுதியின் I ஆம் தரப் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சையை உரியவகையில் நடாத்தல் மற்றும் அந்நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் 2023.03.20 ஆந் திகதி வரை பிற்போடுவதற்கும்,

II. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நாடளாவிய சேவைகளின் நிறைவேற்றுத் தர வகுதியின் I ஆந் தரப் பதவிகளுக்கு நியமனம் செய்யும் செயற்பாட்டிற்கு எடுக்கும் காலத்தை அவதானித்து, அந்த I ஆந் தரப் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய புள்ளி வழங்கும் நடைமுறையுடன் கூடிய விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முறைசார்ந்த அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக 2023.02.28 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு கட்டுப்பட்டு தற்சமயம் அந்த தரம் I இற்கான பதவிகளுக்கு முழு நேரம் கடமையாற்றுதல் என்ற அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள கால வரையறையை 2023.04.30 ஆந் திகதி வரை நீடிப்பதற்கும்,

III. அந்த 30.04.2023 ஆந் திகதி வரை முழு நேரம் பணியாற்றுதல் எனும் அடிப்படையில் பதவிகளுக்கு நியமிக்கப்படும் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட EST மாதிரிப் படிவத்துடன் ஏற்புடைய சகல கடித ஆவணங்களையும் இந்த அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்புமாறு அறிவித்தல்.

IV. 2010 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள, 2022.12.31 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு தரமுயர்த்துவதற்கு தகுதியுடைய உத்தியோகத்தர்கள் தற்சமயம் முழு நேரமாக பணியாற்றுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் முறைசார்ந்த வகையில் நியமிக்கப்பட்டிருப்பின், தரம் I இல் வெற்றிடம் நிலவுவதாக கருத வேண்டியதில்லை எனவும்.

ஒப்பம்/ கே.டீ.என். ரஞ்சித் அசோக
மேலதிகச் செயலாளர் ( பொது நிர்வாகம்)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக


தொலைபேசி இலக்கம் : 0112-698605
தொலைநகல் இலக்கம் : 0112-683651
மின்னஞ்சல் முகவரி : pubad.dslas@gmail.com